**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை**

**எல்.ஏ.ஓ.பி எண்.277 /2004**

**CNR. No.TNTR08-000012-2004**

1. திரு. முத்து (இறந்தவர்)

2. திரு. மஸ்தான் (இறந்தவர்)

3. திருமதி. கணவல்லி

4. தேவகி (இறந்தவர்)

5. ராஜேந்திரன், வயது 63, த/பெ. லேட் திரு. முத்து

6. உஷா, த/பெ. லேட் திரு. முத்து

7. கவிதா, த/பெ. லேட் திரு. முத்து

8. விஜயகுமார், த/பெ. லேட் திரு. முத்து

9. பெருமாள், த/பெ. லேட் திரு. முத்து

10. வெண்ணிலா, த/பெ. லேட் திரு. முத்து

4 முதல் 10 வரையான மனுதாரர்கள் / கோரிக்கையாளர்கள் வசிப்பிட முகவரி பஜனை கோவில் தெரு, செம்பரம்பாக்கம் கிராமம், சென்னை – 600 123.

(4 முதல் 10 வரையான கோருநர்கள் இறந்த முத்துவின் சட்டபூர்வ வாரிசுகள் ஆவர்)

11. ரமணி, த/பெ. லேட் திரு. மஸ்தான்

12. மாரியப்பன், த/பெ. லேட் திரு. மஸ்தான்

13. சுதா, த/பெ. லேட் திரு. மஸ்தான்

14. பிரபு, வயது 40, த/பெ. லேட் திரு. மஸ்தான்

15. சிவா, த/பெ. லேட் திரு. மஸ்தான்

11 முதல் 15 வரையான மனுதாரர்கள் / கோரிக்கையாளர்கள் வசிப்பிட முகவரி பஜனை கோவில் தெரு, செம்பரம்பாக்கம் கிராமம், சென்னை – 600 123.

(11 முதல் 15 வரையான கோருநர்கள் இறந்த மஸ்தானின் வாரிசுகள் ஆவர்)

..மனுதாரர்கள் / கோரிக்கையாளர்கள்

எதிர்

சிறப்பு வட்டாட்சியர், நிலம் கையகப்படுத்தல்,

யூனிட்–I , T.N.H.B. திட்டங்கள்,

நந்தனம், சென்னை – 35.

...எதிர்மனுதாரர் /பரிந்துரை செய்யும் அதிகாரி

இந்த மனு மனுதாரர்கள் / கோரிக்கையாளர்கள் தரப்பில் பூந்தமல்லி வட்டம், குத்தாம்பாக்கம் கிராமத்தில், சர்வே எண்.654/2–ல் உள்ள 0.05.0 ஹெக்டேர் மற்றும் சர்வே எண்.654/3–ல் உள்ள 0.10.5 ஹெக்டேர் நிலத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செயற்கைக்கோள் நகரம் அமைக்கும் திட்டத்திற்காக நிறைவேற்றாணை எண்.1/2003, நாள் தேதி: 10.02.2003–ன் படி நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 30 மற்றும் 31(2)ன் கீழ் கையகப்படுத்தப்பட்ட சொத்தின் மீதான உரிமையை அறிவிக்க வேண்டும் என்றும், கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உயர்த்தப்பட்ட இழப்பீடு வழங்கவும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது 12.03.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ கோரிக்கையாளர்கள்

தரப்பில் திரு. R. சசிகுமார் மற்றும் V. கயல்விழி, ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பரிந்துரை செய்யும் அதிகாரி தரப்பில் கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு.ஜெ.பிராங்க்ளின் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் முறைப்படி விடுக்கப்படும்

**தீர்ப்பாணை கட்டளை**

1) மனுதாரர்கள் 3 மற்றும் 5 முதல் 15 வரையிலானோர், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை பெறத்தக்கவர்கள் என்றும் உத்தரவிடப்பட்டது.

2) செலவுத்தொகை இல்லை.

**செலவுத்தொகை பட்டியல்**

| மனுதாரர்கள் / கோரிக்கையாளரின் செலவுத்தொகை | | எதிர்மனுதாரர் / பரிந்துரை செய்யும் அதிகாரியின் ளசெலவுத்தொகை | |
|---|---|---|---|
| மனுவில் ஒட்டிய முத்திரை | -- | வக்காலத்தில் ஒட்டிய முத்திரை | -- |
| வக்காலத்தில் ஒட்டிய முத்திரை (செலவுக் குறிப்பேடு சமர்ப்பிக்கப்படாததால், பிற செலவுகள் சான்றளிக்கப்படவில்லை) | 5.00 | (செலவுக் குறிப்பேடு சமர்ப்பிக்கப்படாததால், பிற செலவுகள் சான்றளிக்கப்படவில்லை) | -- |
| | 5.00 | | -- |

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>தீர்ப்பாணை கட்டளை</u>**

**எல்.ஏ.ஓ.பி எண்.277/2004**

**நாள் 30.03.2026**

**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**